# பெப்ரவரி – 26 – செவ்வாய்

## புனித மெக்தில்து அம்மாள்

**ஆண்டவரிலேயே மகிழ்ச்சிகொள்: உன் உள்ளத்து விருப்பங்களை அவர் நிறைவேற்றுவார். திபா. 37:4**

## முதல் வாசகம் : சீராக் 2 : 1 - 11

குழந்தாய், ஆண்டவருக்குப் பணிபுரிய நீ முன்வந்தால், சோதனைகளை எதிர்கொள்ள முன்னேற்பாடு செய்துகொள். உள்ளத்தில் உண்மையுள்ளவனாய் இரு. உறுதியாக இரு. துன்ப வேளைகளில் பதற்றமுடன் செயலாற்றாதே. ஆண்டவரைச் சிக்கெனப் பிடித்துக்கொள் அவரை விட்டு விலகிச் செல்லாதே. உன் வாழ்க்கையின் முடிவில் வளமை அடைவாய். என்ன நேர்ந்தாலும் ஏற்றுக்கொள். இழிவு வரும்போது பொறுமையாய் இரு. நெருப்பில் பொன் புடமிடப்படுகிறது. ஏற்புடைய மனிதர் மானக்கேடு எனும் உலையில் சோதித்துப் பார்க்கப்படுகின்றனர். ஆண்டவரிடம் பற்றுறுதி கொள். அவர் உனக்குத் துணை செய்வார். உன் வழிகளைச் சீர்படுத்து. அவரிடம் நம்பிக்கை கொள். ஆண்டவருக்கு அஞ்சுவோரே. அவரிடம் இரக்கத்துக்காகக் காத்திருங்கள் நெறி பிறழாதீர்கள் பிறழ்ந்தால் வீழ்ச்சி அடைவீர்கள். ஆண்டவருக்கு அஞ்சுவோரே, அவரிடம் நம்பிக்கை கொள்ளுங்கள் உங்களுக்குக் கைம்மாறு கிடைக்காமற் போகாது. ஆண்டவருக்கு அஞ்சுவோரே, நல்லவைமீது நம்பிக்கை கொள்ளுங்கள் நிலையான மகிழ்ச்சியையும் இரக்கத்தையும் எதிர்நோக்கியிருங்கள். முந்திய தலைமுறைகளை எண்ணிப் பாருங்கள். ஆண்டவரிடம் பற்றுறுதி கொண்டிருந்தோருள் ஏமாற்றம் அடைந்தவர் யார்? அவருக்கு அஞ்சி நடந்தோருள் கைவிடப்பட்டவர் யார்? அவரை மன்றாடினோருள் புறக்கணிக்கப்பட்டவர் யார்? ஆண்டவர் பரிவும் இரக்கமும் உள்ளவர் பாவங்களை மன்னிப்பவர் துன்ப வேளையில் காப்பாற்றுகிறவர்.

**பதில்பாடல் :** ஆண்டவரையே நம்பியிரு. அவரே உன் சார்பாக செயலாற்றுவார்.

## நற்செய்தி : மாற்கு 9 : 30 - 37

அக்காலத்தில் இயேசுவும் சீடர்களும் புறப்பட்டுக் கலிலேயா வழியாகச் சென்றார்கள். அது யாருக்கும் தெரியக்கூடாது என்று இயேசு விரும்பினார். ஏனெனில், ”மானிடமகன் மக்களின் கையில் ஒப்புவிக்கப்படவிருக்கிறார் அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள். கொல்லப்பட்ட மூன்று நாள்களுக்குப் பின் அவர் உயிர்த்தெழுவார்” என்று அவர் தம் சீடருக்குக் கற்பித்துக் கொண்டிருந்தார். அவர் சொன்னது அவர்களுக்கு விளங்கவில்லை. அவரிடம் விளக்கம் கேட்கவும் அவர்கள் அஞ்சினார்கள். அவர்கள் கப்பர்நாகுமுக்கு வந்தார்கள். அவர்கள் வீட்டில் இருந்த பொழுது இயேசு, ”வழியில் நீங்கள் எதைப்பற்றி வாதாடிக் கொண்டிருந்தீர்கள்?” என்று அவர்களிடம் கேட்டார். அவர்கள் பேசாதிருந்தார்கள். ஏனெனில் தங்களுள் பெரியவர் யார் என்பதைப்பற்றி வழியில் ஒருவரோடு ஒருவர் வாதாடிக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது அவர் அமர்ந்து, பன்னிருவரையும் கூப்பிட்டு, அவர்களிடம், ”ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்” என்றார். பிறகு அவர் ஒரு சிறு பிள்ளையை எடுத்து, அவர்கள் நடுவே நிறுத்தி, அதை அரவணைத்துக் கொண்டு, ”இத்தகைய சிறுபிள்ளைகளுள் ஒன்றை என் பெயரால் ஏற்றுக் கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார். என்னை ஏற்றுக் கொள்பவர் என்னைமட்டும் அல்ல, என்னை அனுப்பினவரையே ஏற்றுக் கொள்கிறார்” என்றார்.

**தியானம்:** உன் குரலைத் தாழ்த்து அப்போது தான் நீ என் குரலை கேட்பாய். சமுதாயத்தில் தூக்கி எறியப்பட்ட தாழ்ந்த, தகுதியில்லாத மக்கள் ஒவ்வொருவரையும் இந்தப் பூமியில் தூக்கி எடுக்கவே இறைமகன் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பி வைத்தார். இறைவனைத் தேடி ஓடி வந்த ஒருவரையும் கூட இறைவன் புறக்கணித்ததில்லை. அவரிடம் பற்றுறுதி கொண்டவர்களை அவர் சோதிப்பார். பொன் நெருப்பில் புடமிட்டால்தான் சுத்தமான தங்கமாக மாறும். அதேபோல மனித வாழக்கையும் கண்ணீர், வேதனைகள், சோதனைகள் என்பதினூடாக ஆழமான வாழ்க்கையாக அமைக்கும்படி முதல் வாசகம் அழைத்து நிற்கின்றது. ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும். ஒரு தலைவராக இருக்க விரும்புகிறவர் ஒரு குழந்தை மதிக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும் என நற்செய்தி வாசகம் கூறுகின்றது. ஒரு போர்க்களத்தில் வீரர் எனப்படுபவர் யுத்தத்தில் காயப்பட்டவனாக இருப்பான். மனித கண்களுக்கு உங்களின் சோகம் மறைவானதாக இருக்கலாம், மனித காதுகளுக்கு உங்கள் கவலைகளின் குரல் கேட்காமல் இருக்கலாம் கண்ணுக்கெட்டிய தூரம் வாழ்க்கை, சூழ்நிலைகள் மாறுவதற்கான அறிகுறி தென்படாதிருக்கலாம். ஆனால் கற்பனைக்கெட்டாதவகையில் உங்களுக்கு ஆறுதல் அளிக்க இறைவன் காத்திருக்கின்றார். எனவே அவரில் பற்றுறுதி கொண்டு வாழ இறைவனிடம் வரம் வேண்டுவோம்.